**திக.மே.துந.க.எண்.எ7/ 644 /2007**
**ஆணையரின் 16.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.89/2008 பொருள் எண்:34

**சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்களுக்கு வருகைப்பதிவினை பயோமெட்ரிக் முறையினை பராமரித்தல்**

சென்னை மாநகராட்சியில் தற்போது துப்புரவு பணியாளர்களின் வருகைபதிவேடு துப்புரவு ஆய்வாளரால் வார்டுகளில் பதியப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

பணியாளர் வருகை பதிவினை நவீனமயமாக்கவும் நடைமுறையில் உள்ள பணியாளர் மேலாண்மை முறையினை மேம்படுத்தவும், மின்னணு முறையில் பணியாளர்களின் வருகையினை பதிவு செய்து பராமரிக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதற்காக மின்னணு பதிவு முறையில் விரல் பதித்து வருகையினை பதிவு செய்யும் முறையினை சென்னை மாநகராட்சியில் அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேலும் சோதனை ரீதியில் இதனை கோட்டம்–64, மண்டலம்–5லும், கோட்டம்–2, மண்டலம்–1லும் செயல்படுத்தப்பட்டு பின்னர் மண்டலம் 5ல் முழுமையாக செயலாக்கவும் தமிழ்நாடு மின்னணு இயல் கழகம் **(Electronic Corporation of Tamil Nadu)** அவர்களுக்கு ரூ.9,01,410/– வழங்கப்பட்டுள்ளது. இதனை இந்நிறுவனம் விரைவில் செயலாக்க உள்ளது. இந்த திட்டத்தை துப்புரவு பணி தனியார் மயமாக்கப்பட்ட மண்டலங்கள் நீங்கலாக மற்ற மண்டலங்களில் படிப்படியாக செயல்படுத்தப்பட வேண்டும்.

இதற்காக ஒவ்வொரு வார்டு துப்புரவு ஆய்வாளர் அலுவலகத்திலும் இந்த மின்னணு விரல்பதிப்பு கணினி, தயார்செய்யப்பட்ட மென்பொருள், அச்சு இயந்திரம் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் ஆகியவற்றை தருவிக்க வேண்டும்.

இத்தகைய முறையில் குறித்த நேரத்தில் பணிக்கு வந்த எவருக்கும் வருகையினை மறுக்க இயலாது. மற்றும் பணிக்கு வராதவர்களுக்கு ஊதியம் வழங்குதல் போன்ற முறைகேடுகள் நடக்கின்றன என்ற கேள்விக்கு இடமிருக்காது. இந்த மின்னணு இயந்திரத்தில் விரல் பதித்து வருகையினை பதிவு செய்யும் முறையில் உள்ள வருகைப்பதிவு விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படலாம்.

எனவே, மின்னணு பதிவு முறையில் விரல் பதித்து வருகையினை பதிவு செய்யும் முறையினை சென்னை மாநகராட்சியில் மண்டலம்–1, 2, 4, 5, 7 மற்றும் 9ல் படிப்படியாக அறிமுகப்படுத்தி செயலாக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும்) நிதி மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 35/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.28, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

தி.க.மே.து.ந.க.எண்.அ5/0128/2007
ஆணையரின் குறிப்பு நாள்: 07.02.2008

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.90/2008 பொருள் எண்:35

**துப்புரவு ஆய்வாளர் / துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு அலுவலக பணிக்கு வாகனப்படி அனுமதித்தல்**

துப்புரவு பணியின் முன்னேற்றத்திற்காகவும், துப்புரவு ஆய்வாளர்களின் பணியை சீரிய முறையில் செயலாற்றப்படுவதை மேற்பார்வையிடவும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பளித்து ஊக்கம் உண்டாக்கவும் துப்புரவு மேற்பார்வையாளர் பதவி உருவாக்க மன்றத்தீர்மானம் 1350/90, நாள்: 22.02.1991 நிறைவேற்றி, அரசின் உத்திரவுபடி அரசாணை எண் எம்.எஸ்.80, ந.நி.ம.கு.வழங்கல் துறை நாள்: 09.03.1994ல் 30 துப்புரவு மேற்பார்வையாளர் பதவிகள் ரூ.1400–40–1600–50–2300–60–2600 (5000–180–8000) என்ற ஊதிய விகிதத்தில் உருவாக்கப்பட்டு ஒரு பகுதிக்கு ஒரு துப்புரவு மேற்பார்வையாளர் என்ற விகிதத்தில் 30 பகுதிகளுக்கு 30 துப்புரவு மேற்பார்வையார்கள் பதவி, துப்புரவு ஆய்வாளர்களின் பதவி உயர்வு மூலம் நியமிக்கப்பட்டு வருகிறது.

**துப்புரவு மேற்பார்வையாளர்களின் பணிகள்**

1) ஒவ்வொரு பகுதியிலும் அடங்கியுள்ள ஐந்து அல்லது ஆறு வார்டுகளின் துப்புரவு பணியை மேற்பார்வையிடுதல்
2) பணியாளர்களின் வருகை பதிவுகள் பராமரிக்கப்படுவதை சரிபார்த்தல்
3) பொதுமக்கள் புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளுதல்
4) குப்பைகளுடன் கட்டிட இடிபாட்டுக் கழிவுகள் கொண்டு செல்லாமல் கண்காணித்தல்
5) குப்பை கொண்டு செல்லும் குப்பை லாரிகளில் வலைகளால் மூடப்பட்டு கொண்டு செல்லப்படுகிறதா என்று கண்காணித்தல்.
6) வகுக்கப்பட்ட வழிதடம் முறையை பின்பற்றப்படுதலை ஆய்வு செய்தல்,
7) பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல் பொருட்கள் வழங்கப்படுகிறதா/ பணியாளர்களின் ஈட்டிய, ஈட்டா மற்றும் மருத்துவ விடுப்பு/ கணக்குகள் முறையாக பணிபதிவேடுகளில் பதிவு செய்யப்படுகிறதா என்று ஆய்வு செய்தல்
8) துப்புரவு ஆய்வாளர்களின் அனைத்து பணிகளையும் மேற்பார்வை செய்தல்.

**துப்புரவு ஆய்வாளர்களின் பணிகள்**

1) காலை 6.30 மணிக்கு துப்புரவு பணியாளர்களின் வருகைப்பதிவினை பதிவு செய்து பணியிட ஒதுக்கீட்டின்படி பணிபுரிய செய்தல்

2) பணியாளர்களின் ஊதியம், சேமநல நிதி, ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து பணம் பெறுதல் போன்ற பணம் சம்பந்தப்பட்டவைகளை பெற்றுதர நடவடிக்கை மேற்கொள்ளுதல்
3) ஈட்டிய, ஈட்டா மற்றும் மருத்துவ விடுப்புகளை துப்புரவு பணியாளர்களின் பணிப்பதிவேடுகளில் பதிவு செய்தல்,
4) பொதுமக்களின் புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை தொடருதல்,
5) துப்புரவு பணி சம்பந்தப்பட்ட துடைப்பம், பிளிச்சிங் பௌடர், பெனாயில் போன்ற பல் பொருட்களை பெற்று பணியாளர்களுக்கு வினியோகித்தல்,
6) மாநகராட்சியின் கட்டுபாட்டிலுள்ள கட்டணக்கழிப்பிடத்தில் வசூலிக்கப்பட்ட கட்டணங்களை குறிப்பிட்ட காலத்தில் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துதல்
7) பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சீருடை, சோப்பு, கையுறை, மூக்கு கவசம், காலனி மற்றும் மழைகோட்டு ஆகியவற்றை பெற்று தருதல்
8) தனியார் நிறுவன நிர்வாகத்திலிருந்து துப்புரவு கட்டணம் பெற்று கழிவுகளை அகற்றுதல்
9) கோட்டங்களில் குப்பை தேக்கம் ஏற்படாவண்ணம் உடனுக்குடன் அகற்றுதல்
10) அகற்றப்படும் குப்பைகள் அவ்வப்போது குப்பை மாற்று நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தல்



11) குப்பை கொண்டு செல்லும் வாகனங்கள் வலையால் மூடப்பட்டு செல்வதை கடைப்பிடித்தல்
12) குப்பைகளுடன் கட்டிட இடிபாடுகள் கொண்டு செல்வதை தவிர்த்தல்

30 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கும் மற்றும் 215 துப்புரவு ஆய்வாளர்களுக்கும் ஏற்கனவே மிதிவண்டி வாகனப்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.50/– வழங்கப்பட்டுவருகிறது. இன்றைய சென்னை மாநகரத்தின் போக்குவரத்து மற்றும் மக்கள் தொகை பெருகியுள்ள நிலையில் இருசக்கர மிதிவண்டி மூலம் (சைக்கிள்) ஐந்து அல்லது ஆறு வார்டுகளின் பணிகளை மேற்பார்வையிடுதல் என்பது இயலாத நிலை என்பதாலும், மாநகராட்யின் எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டுவரும் நிலையில் இயந்திரப் பொறியமைப்புடைய வாகனங்களை பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதாலும், துப்புரவு பணி மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதாலும், துப்புரவு பணியின் முன்னேற்றம் கருதியும், பொது மக்களின் சுகாதாரத்தை பேணிகாக்க வேண்டிய நிர்பந்தம் காரணமாகவும் போக்குவரத்து வாகனப்படி அளித்தல் அவசியமாக கருதப்படுகிறது. மேலும், துப்புரவு பணியின் அவசியம் கருதி அலுவலக பணிக்காக 30 துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் 215 துப்புரவு ஆய்வாளர்களுக்கும் செல்லிடை பேசி (Cell Phone) வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிட தக்கது.

துப்புரவு பணியின் மிக முக்கியமான அங்கமாக துப்புரவு ஆய்வாளர்களின் பணி செயல்பட வேண்டியுள்ளதாலும் பணியாளர்களின் பணியை, பணியாளர்களுடன் சென்று ஆய்வு செய்யவும், எழுத்தர் பணியுடன் ஆய்வுப்பணியையும் சேர்ந்து பணிபுரிய வேண்டியுள்ளது. துப்புரவு ஆய்வாளர்கள் ஒவ்வொரு கோட்டத்திலும் அடங்கியுள்ள அனைத்து தெருக்களையும் சுற்றிவர இருசக்கர மிதிவண்டியை உபயோகிப்பதால் பணியில்

பின்னடைவு ஏற்படுகிறது என்பதாலும் பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு விரைவில் சென்று ஆய்வு செய்ய மோட்டார் சைக்கிள் அவசியமாகிறது.

எனவே, துப்புரவு மேற்பார்வையாளர்கள்/ துப்புரவு ஆய்வாளர்களுக்கு அலுவலக பணிக்காக இயந்திர பொறியமைப்புடைய இருசக்கர வாகனங்கள் (மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர்) மேலே விவரிக்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்த அனுமதிக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய வாகனத்தை பராமரிப்பதற்கும்/ பயன்பாட்டிற்கும் போக்குவரத்து வாகனப்படியாக மாதம்ரூ.230/– வீதம் 30 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கும் 215 துப்புரவு ஆய்வாளர்களுக்கும் வழங்கலாம் என கருத்தினையும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.5,29,200/– ஆகும். அதன் விவரம் கீழ்வருமாறு:

<u>ஒரு நபருக்கு/ ஒருமாத மிதிவண்டி வாகனப்படி = ரூ.50/–</u>

30 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு = ரூ.50 x 30 = ரூ. 1,500/–
ஒரு மாத மிதிவண்டி வாகனப்படி

215 துப்புரவு ஆய்வாளர்களுக்கு = ரூ.50 x 215 = ரூ. 10,750/–
ஒரு மாத மிதிவண்டி வாகனப்படி

––––––––––

30 துப்புரவு மேற்பார்வையாளர்கள் 215 துப்புரவு
ஆய்வாளர்களுக்கு வழங்கப்படும் ஓராண்டின்
மிதிவண்டி வாகனப்படி = ரூ.12,250/–

––––––––––

<u>ரூ.12,250 x 12 = ரூ.1,47,000/–</u>

<u>ஒரு நபருக்கு / ஒரு மாத இரு சக்கர மோட்டார் வாகனப்படி = ரூ.230/–</u>

30 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு
ஒரு மாத வாகனப்படி = ரூ.230 x 30 = ரூ. 6,900/–

30 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு
ஓராண்டிற்கான வாகனப்படி = ரூ.6900 x 12 = ரூ. 82,800/–

215 துப்புரவு ஆய்வாளர்களுக்கு



ஒரு மாத வாகனப்படி = ரூ.230 x 215 = ரூ.49,450/–

215 துப்புரவு ஆய்வாளர்களுக்கு
ஓராண்டிற்கான வாகனப்படி = ரூ.49,450 x 12 = ரூ. 5,93,400/–

–––––––––––

ரூ. 6,76,200/–

------------

கூடுதல் செலவினம் ரூ. 6,76,200 – 1,47,000 = ரூ. 5,29,200/–

மேற்கண்ட காரணங்களுக்காக ஏற்கனவே மிதிவண்டி வாகனப்படியாக மாதம் ஒன்றக்கு ரூ.50/– வழங்கப்படுவதற்கு பதிலாக, துப்புரவு பணியில் ஈடுபடும் துப்புரவு ஆய்வாளர்களுக்கும் / துப்புரவ மேற்பார்வையாளர்களுக்கும் இருசக்கர வாகனங்களின் பயன்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் (மோட்டார் சைக்கிள்) வாகனப்படியாக ரூ.230/–ஐ வழங்கவும், அதற்கான கூடுதல் செலவினத்தை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்க அரசாணை பெற அரசுக்கு கடிதம் அனுப்ப நிலைக்குழு (பணிகள்), மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெற கீழ்கண்ட இனங்களுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அ) துப்புரவு பணியின் அவசியம் கருதியும், முன்னேற்றம் கருதியும், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களின் பணிச்சுமை கருதியும் பொது மக்களின் சுகாதாரத்தை பேணிகாக்க வேண்டிய கடமை உணர்வை ஊக்குவிக்கும் வகையில், ஏற்கனவே மிதிவண்டி வாகனப்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.50/– என வழங்கப்பட்டுவருவதற்கு பதிலாக, 30 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கும் மற்றும் 215 துப்புரவு ஆய்வாளர்களுக்கும் அலுவலகப்பணிக்கு இரு சக்கர வாகனங்கள் (ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள்) பயன்படுத்துபவர்களுக்கு மட்டும் பராமரிப்பிற்காகவும் / பயன்பாட்டிற்காகவும் போக்குவரத்து வாகனப்படியாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.230/–ஐ அனுமதிக்கவும்,

ஆ) அதற்கான ஓராண்டின் கூடுதல் செலவினமான ரூ.5,29,200/–ஐ சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யவும்,

இ) இனம் ‘அ’ மற்றும் ‘ஆ’விற்கு அரசாணை பெற அரசுக்கு கடிதம் அனுப்பவும்,

இனம் ‘அ’, ‘ஆ’ மற்றும் ‘இ’ அனுமதிப்பின் நிலைக்குழு (பணிகள்), மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 34/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.38, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.க.கு.ந.க.எண்.அ8/ 174 / 2008

## ஆணையாளரின் 24/01/2008 நாளிட்ட குறிப்பு
## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.91/2008 பொருள் எண்.36

**அரசாணை அமலாக்கத்திற்கு அனுமதி வேண்டி**

அரசாணை (பல்) எண்.377, நிதி (சம்பளம்) துறை, நாள் 13.10.2005ல் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் நலநிதித்திட்டத்தின் மூலம் தமிழ் நாடு அரசுப்பணியாளர்கள் சிகிச்சை மேற்கொள்வதற்ககாக திருத்திய ஒருங்கிணைக்கப்பட்ட நோய்கள் மற்றும் அதற்குச் சிகிச்சையளிக்கும் தனியார் மருத்துவமனைகள் பட்டியல் விவரம் அரசு வெளியிடப்பட்டுள்ளது. அரசு ஆணை (பல்) எண்.88, நிதி (சம்பளம்) துறை நாள் 20.03.2007ல் கூடுதலாக அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் தனியார் மருத்துவமனைகள் விவரம் இத்திட்டதின் மூலம் சிகிச்சை பெற அறிவுறுத்தப்பட்டது.

அரசாணை எண்.354, நிதி(சம்பளம்) துறை, நாள்:06.08.2007ல் மேலும் சில மருத்துவமனைகள் கூடுதலாக இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டன. இதற்கு முன்னரே, இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட சில மருத்துவமனைகளை விரிவுப்படுத்தப்பட்ட இரத்த நாளம் அறுவை சிகிச்சைக்கு பிரத்யேகமாக சேர்க்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

அரசாணை எண்.430, நிதி (சம்பளம்) துறையில் புதிய சுகாதார காப்பீட்டு திட்டம் ஏற்படுத்தப்பட்டு, அதில் அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி துறை பணியாளர்கள், மாநில பல்கலைகழகப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரும் பயன் பெறும் வகையில் ரூ.2 இலட்சம் நிதியுதவி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெறும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இப்புதிய காப்பீட்டு திட்டத்தில், ஏற்கனவே தமிழ்நாடு அரசுப் பணியாளர் நலத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள மருத்துவமனைளில் பயன் பெறுவதற்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது.

அரசானை (பல்) எண்.532, நிதி (சம்பளம்) துறை நாள் 10.12.1999ல் தமிழக அரசு வெளியிடப்பட்டுள்ள பின்பற்றத்தக்க வழிமுறைகளின்படி மருத்துவ கல்வி இயக்குநர் மற்றும் மருத்துவ மற்றும் ஊரக சுகாதாரப்பணி இயக்குநர் ஆகியோர் சிறப்பு நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதற்கான 43 தனியார் மருத்துவமனைகளை இத்திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு இதனை கவனத்துடன் பரிசீலித்து அரசு ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளை மருத்துவகல்வி இயக்குநர் மற்றும் மருத்துவ மற்றும் ஊரக சுகாதாரப்பணி இயக்குநர் ஆணையரின் பரிந்துறையை ஏற்று இந்த மருத்துவமனைகளும் கூடுதலாக மேற்கண்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டு அந்தந்த மருத்துவமனைகளுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நோய்களுக்கு தமிழக அரசு பணியாளர்கள் தமிழக அரசு நலநிதித்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஏற்கனவே அரசு ஆணைகளில் வெளியிடப்பட்டுள்ள தற்போதுள்ள விதிமுறைகளும் வரையறைகளும் மாற்றம் ஏதும் இல்லை என்றும் அரசு ஆணை (பல்) எண்.354, நிதி (சம்பளம்) துறை நாள்: 06.08.2007ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் படைத்த அலுவலர்கள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி செய்யும் போது அதனை விரைவாக தீர்வு செய்வதற்காக அரசு ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண், சிறப்பு நோயின் தன்மை மற்றும் மேம்பட்ட சிறப்பு அறுவைசிகிச்சையின் பெயர் ஆகியவற்றின் விவரத்தினை தெளிவாகவும் மற்றும் தனியார் மருத்துவமனையின் முழு பெயர் மற்றும் அதன் வரிசை எண்ணையும் அவர்களின் அலுவலக

செயல்முறை ஆணையில் குறிப்பிடுமாறும் அரசு தெரிவித்து இந்த ஆணை பிறப்பித்த நாள் முதல் அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (பல்) எண்.547, நிதி (சம்பளம்) துறை நாள் 14.11.2007ல் உள்ள கூடுதல் மருத்துவமனைகள் அதனைச்சார்ந்த சிறப்பு நோய்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் நலநிதித்திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பயன்பெறும் வகையில் அரசாணையினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வ(ம)நி) மற்றும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.22, நாள்: 22.2.2008–ன்படி அரசாணை (பல்) எண்.547, நிதி (சம்பளம்) துறை நாள் 14.11.2007–ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி5/565/2008

## ஆணையர் அவர்களின் 18.02.2008 நாளிட்ட குறிப்பு
## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.92/2008 பொருள் எண் : 37

**தோராய திட்ட மதிப்பீடு**

சென்னை மாநகராட்சி 2007–2008 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் தொடக்க உரையில், சென்னை மாநகராட்சி வழங்கும் சேவையின் தரத்தை உயர்த்துதல் மற்றும் பணிபுரியும் இடத்தின் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அனைத்து மண்டல மற்றும் வார்டு அலுவலகங்கள் நவீன வசதி வாய்ப்புகளுடன் படிப்படியாக மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முதற் கட்டடமாக, வடசென்னையில் ஒரு நவீன மண்டல அலுவலகமும், தென் சென்னையில் நவீன மண்டல அலுவலகமும் கட்டும் பொருட்டு நில அளவை (Survey) செய்ததில், மத்திய சென்னையில் வார்டு 68ல் புல்லா அவின்யூவில் உள்ள காலியிடம் நவீன மண்டல அலுவலகம் –5 கட்டடம் கட்டுவதற்கு உகந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை வடிவமைப்பு செய்வதற்கான பணி கட்டடத்துறையின் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டட எழில் கலைஞர் திருவாளர்.ஏ. செல்வராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு திருவாளர்.ஏ.செல்வராஜ் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வடிவமைப்பு பலமுறை கலந்தாலோசித்தப்பிறகு சில திருத்தங்களுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டடம் தரைதளம் + 5 தளங்கள் கட்டுவதற்கு ஏதுவாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது தரைதளம் + முதல்தளம் + இரண்டாம் தளம் கட்ட உத்தேசிக்கப்பட்டு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தரைதளம், முதல் மற்றும் இரண்டாம் தளம் ஒவ்வொன்றின் கட்டட பரப்பளவு 1535.00 சதுர மீட்டர் (16517.00 சதுர அடி) ஆகும். இந்த நவீன கட்டடத்தில் வார்டு குழு தலைவர் அலுவலகம், மண்டல அலுவலர் அறை, செயற் பொறியாளர் அறைகள், வருவாய் துறை, சுகாதார துறை, மின் துறை மற்றும் இணையதள சேவை போன்ற தேவையான அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு பொதுப்பணித்துறையின் சுற்றறிக்கை எண். HDO(A)/48518/2003, நாள் 7.5.2007ல் தெரிவித்துள்ளவாறு 2007–2008 ஆம் ஆண்டின் கட்டட பரப்பளவின் விலைவிகித அடிப்படையில் தோராய திட்ட மதிப்பீடு ரூ.525.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட திட்டத்தின் மதிப்பீடு தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் இருப்பதால், இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

1) மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீடு ரூ.525.00 இலட்சங்களுக்கு அனுமதியும் மற்றும்
2) மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் இருப்பதால் இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக அனுமதி பெறவும் நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 29 /08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்)

பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.35, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி1/2316/2005

**Mizah; mth;fspd; 24.1.2008 ehspl;l Fwpg;g[**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.93/2008 பொருள் எண்:38

**ஒப்பந்த புள்ளி ஏற்பு**

| | | |
|---|---|---|
| வார்டு எண்: 107 | : | மண்டலம் –7 |
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | : | உட்புற சாலையான லேக் ஏரியா முதல் பிரதான சாலை (டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை சந்திப்பு முதல் 150 மீட்டர் நீளம் வரை) சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி |
| பணி மேற்கொள்ளவிருக்கும் துறை | : | பேருந்து சாலைகள் துறை |
| மதிப்பீட்டுத் தொகை | : | ரூ.44,98,000.00 |
| விலைப்பட்டி ஆண்டு | : | 2007–2008 ஆம் ஆண்டு விலை விகிதம் |
| மதிப்பீட்டு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | : | நிலைக்குழு (வ.வி(ம) நிதி) தீர்மான எண். 166/07 நாள் 19.10.2007 |
| ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | : | |

| வ.எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு / திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு (அ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2007–2008ஆம் ஆண்டு விலை விகிதப்படி விழுக்காடு அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். எஸ்.எம். எண்டர்பிரைசஸ் (உரிமையாளர்) திரு.ஆர்.சிவகுமார் | 38,78,494.10 | 56,47,087.41 | (+) 45.60% |
| 2 | திரு.எல்.வெங்கடேசன் (உரிமையாளர்) திருவாளர்கள். ஸ்ரீ ராம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 38,78,494.10 | 57,01,386.33 | (+) 47.00% |

| | | |
|---|---|---|
| குறைந்த ஒப்பபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரம் | : | விலை குறைப்பு செய்ய இயலாது என்று 1 0. 9. 2007 அன்று கடிதம் அளித்துள்ளார். |
| பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பத்தொகை / ஒப்ப சதவிகிதம் | : : | விலை குறைப்பு செய்யாததால், அதே ஒப்பத் தொகையான ரூ. 56,47,087.41 (+) 45. 60 % அதிகம் |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | : | திருவாளர்கள். எஸ்.எம். எண்டர்பிரைசஸ் (உரிமையாளர்) திரு.ஆர்.சிவகுமார் |
| இறுதி ஒப்பத்தொகை ரூபாய் | : | ரூ. 56,47,087.41 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | : | (+) 45.60 % அதிகம் (வெளி சந்தைகளில் நிலவும் விலைகளில் ஒப்பிடுகையில் ஒப்ப சதவிகிதம் 27.22% அதிகமாகும் ) |
| விலைப்பட்டி ஆண்டு | : | 2007–08 ஆம் ஆண்டின் அலுவலக விலை விகிதப்படி |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். எஸ்.எம். எண்டர்பிரைசஸ் (உரிமையாளர்) திரு.ஆர்.சிவகுமார் அவர்களுக்கு ரூ. 56,47,087.41–க்கு இவ்வலுவலக 2007–2008 ஆம் ஆண்டு விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 45.60% அதிகத்திற்கு (வெளி சந்தைகளில் நிலவும் விலைகளில் ஒப்பிடுகையில் ஒப்ப சதவிகிதம் 27.22%

அதிகம்) அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி(ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 30/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.27, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பூ.து.ந.க.எண்.பி1/915/2007</u>**
**<u>ஆணையரின் 15/02/2008 நாளிட்ட குறிப்பு</u>**
**<u>29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.94/2008 பொருள் எண்.39

**<u>சென்னை மாநகராட்சி,பூங்காத்துறையில் அஷ்டலட்சுமி கோயிலிலிருந்து திருவான்மியூர் நகர எல்லை வரையில் கடற்கரை பகுதியினை மேம்பாட்டு மற்றும் அழகுபடுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு ஆட்சி முறை அனுமதி வேண்டுதல்.</u>**

சென்னை மாநகராட்சி, பூங்காத்துறையில் அஷ்டலட்சுமி கோயிலிலிருந்து திருவான்மியூர் நகர எல்லை வரையில் கடற்கரை பகுதியினை மேம்பாட்டு மற்றும் அழகுபடுத்தும் பணிக்கு, சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 2007–2008ம் ஆண்டின் விலைவிகிதப்படி தயாரிக்கப்பட்ட **மதிப்பீடு ரூ.4,68,00,000/–**(ரூபாய் நான்கு கோடியே அறுபத்தெட்டு இலட்சம் மட்டும்)–க்கு ஆட்சி முறை ஒப்பளிப்பு வேண்டி அரசுக்கு முன் மொழிவுகள் சமர்ப்பிக்கவும், மற்றும் அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரவும், மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

> “20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 37/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.25, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பூ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.பி5/6529/2007

ஆணையர் அவர்களின் 04.02.2008 நாளிட்ட குறிப்பு

29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.95/2008 பொருள் எண்.40

தொற்று நோய் மருத்துவமனை – பாதுகாவலர்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் நியமிக்க – ஒப்புதல் வேண்டுதல் – சம்பந்தமாக

சென்னை மாநகராட்சி தொற்று நோய் மருத்துவமனையில் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள 7 பாதுகாவலர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளர் நியமிக்க குறைந்த விளைப்புள்ளி மூலம் (HDC.No.B5/73070/2006) நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் நாசே செக்யூரிட்டி சர்வீஸ் அவர்கள் மட்டுமே கலந்து கொண்டு கீழ்கண்டவாறு விலைப்புள்ளி அளித்துள்ளார்.

பாதுகாவலர் 1 நபருக்கு – ரூ.4,500/–
பாதுகாப்பு மேற்பார்வையாளர் 1 நபருக்கு – ரூ.6,000/–

மேற்கண்ட நிறுவனத்தினரை விலைப் புள்ளிகள் சம்பந்தமாக பேச்சு வார்த்தைக்கு அழைத்தும் அவர்களிடமிருந்து யாதொரு பதிலும் பெறப்படாத நிலையில், கூடுதல் ஆணையாளர் (கல்வி) அவர்கள் குறிப்பின்படி மீண்டும் குறைந்த விளைப்புள்ளி கோரி 14.12.2007 அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த முறையும் M/s.ராஜீ செக்யூரிட்டி போர்ஸ் என்ற நிறுவனம் மட்டும் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு விலைப் புள்ளிகள் அளித்துள்ளனர். (இந்த நிறுவனம் சென்னை மாநகராட்சி கல்வி துறையில் தற்சமயம் பணியாற்றி வருகின்றனர்).

1. பாதுகாவலர் 1 நபருக்கு – ரூ.3,500/–
2. பாதுகாப்பு மேற்பார்வையாளர் 1 நபருக்கு – ரூ.4,500/–

இயக்குநர், தொற்று நோய் மருத்துவமனை அவர்கள் தனது குறிப்பில் முதல் முறை கலந்து கொண்ட நிறுவனத்தின் விலைப் புள்ளியை விட இரண்டாவது முறை கலந்து கொண்ட M/s. ராஜீ செக்யூரிட்டி அவர்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் இவர்களை பரிந்துரை செய்யவும், பாதுகாப்பு மேற்பார்வையாளரை தவர்த்து 7 பாதுகாவலர் பணியாளர்களை மட்டும் நியமிக்க ஆணையரிடம் ஆணை பெறப்பட்டது.

எனவே கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. M/s. ராஜ் செக்யூரிட்டி சர்வீஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும் அதற்கென ஒரு ஆண்டுக்கு ஆகும் செலவான ரூ.2,94,000/– மேற்கொள்ளவும் (ரூ.3,500 X 7 X 12 = ரூ.2,94,000/– )
2. 1 பாதுகாப்பு மேற்பார்வையாளரை நியமிப்பதை தவிர்க்கவும்
3. மேற்கண்ட செலவினங்கள் தொற்று நோய் மருத்துவமனை தலைப்பு கணக்கு 43, கணக்குகுறியீடு 369ல் (சில்லறை செலவினங்கள்) செலவிடவும் நிலைக்குழுக்கள் பொது சுகாதாரம் மற்றும் வரிவிதிப்பு (ம) நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.02.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.10 /2008 நாள் 11.02.2008–ன்படி இப்பொருள் சம்பந்தமாக

ஏற்கெனவே பெறப்பட்ட மன்றத் தீர்மான எண்.285/2007 நாள் .22.06.2007–ஐ ரத்து செய்து 1, 2, 3 இனங்களுக்கு அனுமதி அளித்து நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.20, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/1046/2007

**ஆணையரின் 08.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.96/2008 பொருள் எண்: 41

**ஜவஉறர்லால் நேரு தேசீய நகர புதுப்பித்தல் திட்டம் (JNNURM) மூலம் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு டுபிட்கோ நிதி நிறுவனத்தில் 25 விழுக்காடு டுபிட்கோ M.I.D.F. நிதியின் கீழ் கடன் பெறுதல்**

ஜவஹர்லால் நேரு தேசீய நகர புதுப்பித்தல் திட்டத்தில் (JNNURM) மேற்கொள்ளும் பணிகளுக்காக திட்ட மதிப்பீட்டில் ரூ.33808.60 லட்சத்தில் (15 விழுக்காடு) ரூ.5071.29 லட்சம் வட்டியில்லா கடனாகவும் மற்றும் (35 விழுக்காடு) ரூ.11833.01 லட்சம் மான்யமாகவும் மொத்தம் 50 விழுக்காடு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) வழியாக வட்டியில்லா கடன் மற்றும் மான்யம் பெறுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. எஞ்சிய 50 விழுக்காடு தொகையில் பாலங்கள் துறை பணிகளுக்கு மட்டும் 25 விழுக்காடு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் M.I.D.F. நிதியின்கீழ் ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் 15 ஆண்டு காலம் திருப்பி செலுத்தக்கூடிய கடன் வழங்க தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) கடித எண். TUFIDCO/MIDF/AM(B)/08, நாள்:08.01.2008. மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கடனை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ள மாதிரி படிவத்தில் உள்ளபடி கீழ்காணும் 1 முதல் 4 இனங்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

## Format for Council resolution (As prescribed by TUFIDCO)

1. Resolved that Chennai Corporation Council is authorizing the authorized signatory to borrow the loan of **Rs.2069.16** lakhs at an interest rate of 4% per annum repayable within a period of 15 years under the MIDF scheme for the following three projects at an estimated cost of **Rs.8276.60** lakhs as per the terms and conditions prescribed by TUFIDCO.

(Rs. in lakhs)

| Sl.No. | Name of the Project & Scheme No. | Estimate Cost | MIDF Loan (25%) |
|---|---|---|---|
| 1 | Construction of Road over bridge at Perambur<br>**Scheme No.M0708-011** | 3287.50 | 821.88 |
| 2 | Construction of High level bridge in lieu of existing low level causeway at Alandur Road across Adayar River<br>**Scheme No.M0708-010** | 548.30 | 137.08 |
| 3 | Construction of ROBs and RUBs at Chennai – 6 Nos. | 4440.80 | 1110.20 |

| | | | |
|---|---|---|---|
| | **Scheme No.M0708-009** | | |
| | **TOTAL** | **8276.60** | **2069.16** |

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including the affixing of the common seal of Chennai Corporation on the documents to be executed with TUFIDCO on behalf of Chennai Corporation.

3. Resolve to repay the loan assistance from MIDF scheme as per the repayment schedule in the agreement

4. Resolved that Chennai Corporation Council is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Chennai Corporation's annual budget for the repayment of principal and interest for these projects to TUFIDCO and confirms that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.

**–2–**

**நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/1046/2007**

## மன்றத் தீர்மானம் (டுபிட்கோ மாதிரிப் படிவம்)

**1.** டுபிட்கோ நிதி நிறுவனம் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட மூன்று பணிகளுக்கு மொத்த மதிப்பீட்டு தொகையான **ரூ.8276.60 லட்சத்தில் 25** விழுக்காடு கடன் தொகையாக **ரூ.2069.16 லட்சம்** தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் எம்.ஐ.டி.எப். நிதியின் கீழ் ஆண்டிற்கு **4** விழுக்காடு வட்டி விகிதத்தில் **15** ஆண்டு காலம் திருப்பி செலுத்தும் வகையில் வரைமுறை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் பெற்றிட ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | பணிகளின் பெயர் | திட்ட மதிப்பீடு | எம்.ஐ.டி.எப். கடன்(25%) |
|---|---|---|---|
| 1 | பெரம்பூர் அருகே மேம்பாலம் கட்டும் பணி | 3287.50 | 821.88 |
| 2 | அடையாறு ஆற்றின் குறுக்கே ஆலந்துார் சாலையில் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி | 548.30 | 137.08 |
| 3 | சென்னை நகரின் 6 இடங்களில் இரயில்வே சந்திக்கடவின் மேல்மட்ட பாலம் மற்றும் கீழ்மட்ட பாலம் அமைக்கும் பணி | 4440.80 | 1110.20 |
| | மொத்தம் | **8276.60** | **2069.16** |

**2.** சென்னை மாநகராட்சி சார்பாக டுபிட்கோ நிதி நிறுவனத்துடன் கடன் தொகைக்கான உடன்படிக்கை மற்றும் ஆவணங்கள் சென்னை மாநகராட்சி பொது முத்திரையிடுதல் ஆகிய அனைத்து நடைமுறைகளையும் இந்நிதி நிறுவனத்துடன்

செயல்படுத்துவதற்கு மாமன்றம் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.

3. சென்னை மாநகராட்சி சார்பாக பெறப்பட்ட எம்.ஐ.டி.எப். நிதியின் கீழ் கடன் தொகையினை உடன்படிக்கையில் கூறியுள்ளவாறு திரும்பச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க தீர்மானிக்கப்படுகிறது.

4. டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட திட்டங்களுக்கு பெறப்பட்ட கடன் தொகையினை திருப்பி செலுத்த வருடாந்திர வரவு செலவு திட்டத்தில் தேவையான ஒதுக்கீடு செய்வதற்கும் சென்னை மாநகராட்சி மாமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையாளர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கவும் தீர்மானிக்கப்படுகிறது.

எனவே, மேற்கண்ட 4 இனங்களுக்கு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.18, நாள்: 22.2.2008–ன்படி 4 இனங்களுக்கு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.நி.பி.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/176/99

## ஆணையர் அவர்களின் 18.02.2008 நாளிட்ட குறிப்பு
## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.97/2008 பொருள் எண்:42

### சென்னை நகரில் பல்வேறு இடங்களில் சுரங்கப்பாதை / மேம்பாலம் அமைக்கும் பணி நிலம் கையகப்படுத்துதல் சென்னை மாவட்ட ஆட்சியரை தனியாரிடம் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தீர்வு காண மன்றத்தின் அனுமதி கோரல்

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களில் சுரங்கப்பாதைகள்/ மேம்பாலங்கள் அமைக்கும் பணிக்கு ஒப்பங்கள் முடிவு செய்யப்பட்டு பணி துவங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. ஆனால் சில பணி இடங்களில் பணிதுவங்குவதற்கு முன்னர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. சென்னைமாவட்ட ஆட்சியர் மூலமாக நிலம் கையகப்படுத்தப்பட வேண்டி நடவடிக்கை எடுக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளது, முடிவடைய மேலும் கால அவகாசம் தேவைப்படும் நிலை உள்ளது.

கட்டுமான பணி விரைவில் துவங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளதால் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டி நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் பொழுதே காலதாமதத்தை தவிர்த்திட சென்னைமாவட்ட ஆட்சியர் தனியாரிடம் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண கேட்டுக்கொள்ளலாம்.

பணி மற்றும் நிலம் கையகப்படுத்துதல் குறித்த தற்போதைய நிலை பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | சாலையின் பெயர் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | வில்லிவாக்கம் எல்.சி–2 இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப் பாதை | செங்குன்றம் சாலை | நிலம் கையகப்படுத்துவதற்கு அரசின் ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. 4(1) மற்றும் (6) க்கு அரசாணை எண் பெறப்பட வேண்டும். |
| 2 | கத்திவாக்கம் – காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திக்கடவில் மேம்பாலம் | கத்திவாக்கம் நெடுஞ்சாலை | முதனிலை மதிப்பாய்வு பெறப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது. |
| 3 | கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் வாகன சுரங்கப் பாதை | தியாகப்பன் தெரு | முதனிலை மதிப்பாய்வு பெறப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது. |

இதுபோன்றே டர்ன்புல்ஸ் சாலை , செனடாப் சாலை, பலகை வாராவதி பால சாலை, வடக்கு நிழற் சாலை, திருவள்ளுவர் சாலை ( திருவான்மியூர் ) பழைய சிறைச்சாலை ( மின்ட்) மற்றும் டாக்டர்.அம்பேத்கார் சாலை (வியாசர்பாடி) ஆகிய இடங்களில் நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்படும் காலதாமதத்தை தவிர்த்திட சென்னை மாவட்ட ஆட்சியரை தனியாரிடம் நேரடி பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு செய்ய கேட்டுக்கொள்ளலாம். இவ்விடங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு விவரம் (L.P.S. ) கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே நிலம் கையகப்படுத்துவதற்கு காலதாமதத்தை தவிர்த்திட சென்னை மாவட்ட ஆட்சியரை தனியாரிடம் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தீர்வு காணுமாறு கோரும் தீர்மானம்

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 48/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.34, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/1508/2001

**ஆணையர் அவர்களின் 15.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.98/2008 பொருள் எண்.43

**கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகன சுரங்கப்பாதை அமைக்கும் பணி கோ–11 மண்டலம்–1– திருத்திய மதிப்பீட்டுத் தொகை – மன்றத்தின் அனுமதி கோரல்**

கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திக்கடவில் தியாகப்பா செட்டித்தெரு மற்றும் கண்ணன் தெருக்களை இணைத்து கோட்டம் – 10 மற்றும் 11, மண்டலம் – 1ல் வாகனச்சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.720 லட்சங்களுக்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.278/2003, நாள்.30.05.2003 மூலம் கீழ்க்காண்பவைகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

(1) இத்திட்டத்திற்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அளித்துள்ள தோராய மதிப்பீடு தொகையான ரூ.720 லட்சங்களுக்கு ஒப்புதலும் மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,

(3) இத்திட்டத்திற்கான தொகையினை, சென்னை மாநகராட்சி, நிதி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

இதனடிப்படையில் அரசுக்கு 21.07.2003 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. இதனிடையயே பொதுமக்களின் நலன் மற்றும் விருப்பம் கருதி இத்திட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக 2005 – 2006 அலுவலக விலைப்பட்டியிலின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.496.40 லட்சங்களுக்கு ஒப்புதல், திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றம் மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோர அனுமதியும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் 08.08.2006 நாளிட்ட குறிப்பின் மூலம் பெறப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. ஒப்பங்கள் விற்பனையாகவில்லை. எனவே, ஒப்பக்குழுமம் மறு ஒப்பம் கோர பரிந்துரை செய்தது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.494.50 லட்சங்களுக்கு திருத்திய

மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.96/2007, நாள் 09.03.2007ன் மூலம் கீழ்க்கண்ட இனங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

(1) 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.494.50 லட்சங்களுக்கு அனுமதியும் மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதியும்,
(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
(3) இத்திட்டத்திற்கான செலவினத்தை சென்னை மாநகராட்சி மூலதன நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள அனுமதியும்,
(4) 2006 – 2007ம் ஆண்டு திருத்திய அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையான ரூ.494.50 லட்சங்களுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத மன்றத்தின் அனுமதியும்



அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு அரசாணை நிலை எண்.84, நாள் 11.06.2007 மூலம் பெறப்பட்டது. இதனிடையே இரயில்வே துறை கூடுதல் இருப்புப்பாதை அமைத்துள்ளதால் பணிக்கு தேவைப்படும் நிலத்தினை தர இயலாத நிலையில் பணியிட வரைபடத்தை சற்று மாற்றியமைத்துள்ளது. அதன் அடிப்படையில் 2007 – 2008ம் ஆண்டு விலைப்பட்டியல்படி ரூ.628.00 லட்சங்களுக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தீர்மான மற்றும் அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறப்பட வேண்டும் எனவே இக்குறிப்பு ஏற்கப்படின்

(1) 2007 – 2008ம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.628.00 லட்சங்களுக்கு அனுமதியும் மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதியும்,
(2) இத்திட்டத்திற்கான செலவினத்தில் 50 சதவீதம் சென்னை மாநகராட்சியும் 50 சதவீதம் தென்னக இரயில்வேயும் பகிர்ந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியும்,
(3) 2007 – 2008ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகையான ரூ.628.00 லட்சங்களுக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு மற்றும் ஒப்பங்கள் கோர அனுமதி கோரியும் மற்றும் ஏற்கனவே பெறப்பட்ட அரசாணை நிலை எண்.84, நாள் 11.06.2007யை நீக்கவும் அரசுக்கு கடிதம் எழுத மன்றத்தின் அனுமதியும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.43 /08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.33, நாள்: 22.2.2008–ன்படி 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

தி.க.மே.து.ந.க.எண்.எ7/1869/2007

**ஆணையரின் 18.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.99/2008 பொருள் எண்.44

**வார்டு எண்.60ல் எஸ்.எஸ்.புரத்தில் மண்டலம் 4க்கு நவீன குப்பை மாற்று நிலையம் கட்டும் பணி**

வார்டு எண்.60ல் எஸ்.எஸ்.புரத்தில் மண்டலம் 4க்கு நவீன குப்பை மாற்று நிலையம், அலுவலக கட்டடம், மின்சார பணி, பக்கவாட்டு கால்வாய், எடைமேடை, தரைதளம் அமைக்கும் பணி, தண்ணீர் வசதி மற்றும் கழிவு நீர் வசதிகள் விலங்குகள் செல்லாமல்தடுக்க தடுப்பு அமைக்கும் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்காக ரூ.1,99,50,000/–க்கு திட்ட மதிப்பீட்டிற்கு தீர்மானம் எண்.379/2007, நாள் 30.07.2007ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

பின்னர், ஒப்பங்கள் அழைக்கப்பட்டதில் 4 அழைப்புகளுக்கு பிறகு 04.01.2008 அன்று 5ஆம் அழைப்பில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் கீழ் வருமாறு

| ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | | | |
|---|---|---|---|
| ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ,) | 2007–08ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு (ரூ) |
| திரு. ராமாராவ் | 1,38,40,000/– | 2,28,36,000/– | (+) 65 % |
| திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 1,38,40,000/– | 2,14,52,000/– | (+) 55 % |

இதில் குறைந்த விலை விகிதம் கோரிய திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுடன் 21.01.2008 அன்று விலைக்குறைப்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. பேச்சு வார்த்தைக்குப்பிறகு திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தங்களது விலைவிகிதத்தை அலுவலக விலை விகிதத்தை விட 40(+) % க்கு குறைத்து அளித்துள்ளனர். அதன்படி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,93,76,000/– ஆகும்.

சென்னை மாநகராட்சியில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் விலைப்பட்டி விவரத்தில்(Data) சந்தை விலைகளை கையாண்டு அந்த மதிப்பில் ஒப்பங்களை வழங்கலாம். சந்தை விலையினை பொறுத்தமட்டில் Builders Association of India-South Centre விலைகளை ஆய்வு செய்து இந்து (The Hindu) ஆங்கில நாளிதழில் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. ஆகவே, சமீபத்தில் வெளியிடப்பட்ட விலைகளை ஆதாரமாகக் கொண்டு கீழ்க்கண்ட விலைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி பணியின் மதிப்பு ரூ.1,88,84,680/– ஆகிறது.

| | |
|---|---|
| மணல் | ரூ.882.00/ க.மீ |

| | |
|---|---|
| கான்கிரீட் 1 : 4 : 8 | ரூ.2893.50/ க.மீ |
| ஆர்.எம்.சி.எம் 15 | ரூ.3495/க.மீ ( M 20) |

மேற்கண்ட சந்தை விலைப்படி கணக்கிடப்பட்டு ஒப்பிடுகையில் தற்போதைய சந்தை விலையை விட ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையானது அலுவலக மதிப்பீட்டினை விட (+) 40% அதிகம். ஒப்பந்ததாரர் கோரியுள்ள விலைவிகிதம் சந்தை விலையை விட 3.55 சதவிகிதம் அதிகமாகும்.

இது ஒரு சிறப்புத்தன்மை வாய்ந்த பொது மக்களுக்கு பயன் தரும் பணியாகும்.

மேலும், ஒப்பம் 4 அழைப்புகளுக்கு பிறகு 5ஆம் அழைப்பில் பெறப்பட்டுள்ளது. சென்ற அழைப்புகளுக்கு எந்த ஒப்பமும் பெறப்படவில்லை. மேலும் வரவிருக்கும் 2008–2009ஆம் நிதியாண்டில் அலுவலக விலைவிகிதம் அதிகரிக்கும் என்பதால் இம்மதிப்பீட்டின் தொகையும் தொகையும் அதிகரிக்கக்கூடும்.

எனவே, இந்த ஒப்பத்தை நிராகரித்து மறு ஒப்பம் கோரினால் இந்த திட்டம் நிறைவேறுவதில் மேலும் காலதாமதமாகும் என்பது மட்டுமல்லாமல் ஒப்பந்ததாரர் கோரும் தொகையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.





மேற்சொன்ன காரணிகளை(Factors) ஒப்பந்தப்புள்ளி குழுவும் பரிசீலித்து இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.1,93,76,000/–(ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து எழுபத்தாறாயிரம் மட்டும்)க்கு 2007–2008ஆம் ஆண்டு அலுவலக மதிப்பீட்டினை விட (+) 40% கூடுதலாக அளிக்க தங்களது பரிந்துரையினை வழங்கியுள்ளனர்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ரூ.1,93,76,000/–(ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து எழுபத்தாறாயிரம் மட்டும்)க்கு 2007–2008ஆம் ஆண்டு அலுவலக மதிப்பீட்டினை விட (+) 40% கூடுதலாக அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி மூலம்) சமர்ப்பிக்கப்படுகிறது.

> “20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 47/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.32, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>தி.க.மே.து.ந.க.எண். எ7/0285 /2008</u>

## <u>ஆணையரின் 15.02.2008 நாளிட்ட குறிப்பு</u>
## <u>29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண்.100/2008 பொருள் எண்: 45

### <u>சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையை கொட்ட பல்லவபுரம் நகராட்சிக்கு அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டுதல்</u>

ஆணையர், பல்லவபுரம் நகராட்சி, அவர்களின் 24.01.2008 கடிதத்தில், அந்நகராட்சியில் தினமும் சுமார் 75 மெட்ரிக் டன் குப்பைகள் எடுக்கப்படுகிறது என்றும், தற்போது அந்நகராட்சிப் பகுதிக்குள் உள்ள கணபதிபுரம் என்னும் இடத்தில் சுமார் 2.50 ஏக்கர் நிலப்பரப்பிற்குள் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது என்றும், சுமார் 35 வருட காலமாக அதே இடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் குப்பைகள் சுமார் 15 அடி உயரத்திற்கு சேர்ந்து அதற்குமேல் அந்த இடத்தில் குப்பைகள் சேகரிக்க முடியாத கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது என்றும், மேலும் அந்த இடத்திற்கு உடனடியாக மாற்று இடம் தேர்வு செய்ய உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும், எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்கள் 19.01.2008 அன்று சென்னை மாநகராட்சி குப்பை கொட்டுமிடமாகிய பெருங்குடியில் பல்லவபுரம் நகராட்சியில் தினசரி எடுக்கப்படும் குப்பைகளின் ஒரு பகுதியினை தற்காலிகமாக சென்னை மாநகராட்சியின் அனுமதியுடன் கொட்டிக்கொள்ள தெரிவித்துள்ளார் என்றும், அந்நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த அரசால் வேங்கடமங்கலம் கிராமத்தில் பல்லாவரம், தாம்பரம், ஆலந்தூர் நகராட்சிகளுக்கு 50 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு அதில் மத்திய அரசின் உதவி ரூ.40.00 கோடியில் நவீன உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், அப்பணிகள் முடிவடைய சுமார் ஒரு வருட காலமாகலாம் என்றும், அதுவரை தற்காலிகமாக அந்நகராட்சியில் தினசரி எடுக்கப்படும் குப்பைகளில் சுமார் 50 மெட்ரிக்டன் குப்பைகளை அந்நகராட்சிக்கு அருகில் உள்ள சென்னை மாநகராாட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பெருங்குடி குப்பை கொட்டும் தளத்தில் கொட்ட அனுமதிக்கும்படியும் அதற்கு பராமரிப்பு செலவுத்தொகை நிர்ணயத்தால் அதை செலுத்திவிடுகிறோம் என்றும் கூறியுள்ளார்.

ஏற்கனவே, சென்னை மாநகராட்சியில் தனியார் எவரேனும் குப்பையினை குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்ட விரும்பினால் அதற்கென களைதல் கட்டணம்(Disposal Charges) செலுத்தி சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு களைய அனுமதி வழங்கலாம் என்று மன்றத்தின் தீர்மானம் எண்.400/2003, நாள்24.07.2003 அமலில் உள்ளது. இந்த தீர்மானத்தில் கீழ்வருமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(1) தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையினை களைய விரும்பினால், அவர்களிடமிருந்து களைதல் கட்டணம் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கவும், (2) அதற்கான களைதல் கட்டணத்தை 2003ஆம் ஆண்டிற்கு ரூ.161/–(ரூபாய் நூற்று அறுபத்து ஒன்று மட்டும்) என்றும் மற்றும் அதனில்

ஒவ்வோர் ஆண்டும் 10 சதவிகிதம் அதிகரிப்பு செய்து களைதல் கட்டணத்தை நிர்ணயிக்கவும் (3) அதற்கான விதிமுறைகளை வகுக்கவும்

தற்போது 2008ம் ஆண்டிற்கு தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை களைவதற்காக ஒரு டன்னிற்று ரூ.261/–(ரூபாய் இரு நூற்று அறுபத்து ஒன்று மட்டும்) தனியாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஆனால் இந்த அனுமதி சென்னை மாநகரில் உருவாகும் அல்லது சென்னை மாநகருக்குள் தனியாரால் சேகரிக்கப்படும் குப்பைக்கு மட்டுமே நடைமுறையில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் வளசரவாக்கம் ஊராட்சி அமைப்பிற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அவர்கள் சேகரிக்கும் குப்பையினை அவர்களிடமிருந்து மேற்சொன்ன விகிதத்தில் களைதல் கட்டணத்தை பெற்றுக்கொண்டு குப்பையை களைய தற்காலிகமாக இரண்டு மாதங்களுக்கு அந்த ஊராட்சி சென்னை மாநகரின் அருகில் உள்ளதாலும் சென்னை மாநகரின் புறநகர் சுற்றுச்சூழல் இனம் தொடர்பானது என்பதாலும் மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அனுமதி வழங்கப்பட்டு பின்னர் மன்றத்தின் பின்னேற்பும் பெறப்பட்டது.

**<u>தி.க.மே.து.ந.க.எண். எ7/0285 /2008</u>**

தற்போது பல்லவபுரம் நகராட்சியும் அவர்களுடைய குப்பை கொட்டும் இடத்தில் குப்பை கொட்ட இயலாமல் உயர்நீதி மன்றத்தடை உள்ளதாக தெரிவிக்கப்படுவதால், சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்ட அனுமதி கேட்கிறார்கள் என்பதாலும், இந்த நகராட்சியும் சென்னை மாநகரத்தின் புறநகர் பகுதி என்பதாலும், இது சுற்றுச்சூழல் இனம் என்பதாலும், மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள களைதல் கட்டணவிகிதத்தில் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுடன் சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அவ்வூராட்சியில் உருவாகும் குப்பையினை கொட்டுவதற்கு அனுமதி வழங்கியதற்கு நிலைகுழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 39/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.31, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**திி.க.மே.து.ந.க.எண். எ7/663/2007**

**ஆணையரின் 15.02.2008 நாளிட்ட குறிப்பு**

**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.101/2008 பொருள் எண்:46

**மடிப்பாக்கம் ஊராட்சிக்கு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையை கொட்ட அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டுதல்**

தலைவர், மடிப்பாக்கம் ஊராட்சி, அவர்களின் 21.01.2008 நாளிட்ட கடிதத்தில் மடிப்பாக்கம் ஊராட்சியின் குப்பைகளை கொட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் காரப்பாக்கம் என்றும், அப்பகுதியில் தற்சமயம் திடக்கழிவு மேலாண்மைக்கான வேலைகள் நடந்து வருகிறது என்றும், அதனால் மடிப்பாக்கம் ஊராட்சி குப்பைகளைக் கொட்டுவதற்கு இடமில்லாமல் இருக்கிறது என்றும், எனவே, சென்னை மாநகராட்சி குப்பைகளை கொட்டிவரும் பள்ளிக்கரணை, பெருங்குடி பகுதிகளில் மடிப்பாக்கம் ஊராட்சியில் சேரும் குப்பைகளை தற்சமயம் கொட்டுவதற்கு அனுமதிக்கும்படியும் அப்படி கொட்டுகின்ற குப்பைகளுக்கான கட்டணத்தை மடிப்பாக்கம் ஊராட்சி மன்றம் நமது நிர்வாகத்திற்கு செலுத்த தயாராக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, சென்னை மாநகராட்சியில் தனியார் எவரேனும் குப்பையினை குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்ட விரும்பினால் அதற்கென களைதல் கட்டணம்(Disposal Charges) செலுத்தி சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு களைய அனுமதி வழங்கலாம் என்று மன்றத்தின் தீர்மானம் எண்.400/2003/ நாள்24.07.2003 அமலில் உள்ளது. இந்த தீர்மானத்தில் கீழ்வருமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(1) தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையினை களைய விரும்பினால், அவர்களிடமிருந்து களைதல் கட்டணம் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கவும், (2) அதற்கான களைதல் கட்டணத்தை 2003ஆம் ஆண்டிற்கு ரூ.161/—(ரூபாய் நூற்று அறுபத்து ஒன்று மட்டும்) என்றும் மற்றும் அதனில் ஒவ்வோர் ஆண்டும் 10 சதவிகிதம் அதிகரிப்பு செய்து களைதல் கட்டணத்தை நிர்ணயிக்கவும் (3) அதற்கான விதிமுறைகளை வகுக்கவும்

தற்போது 2008ம் ஆண்டிற்கு தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை களைவதற்காக ஒரு டன்னிற்று ரூ.261/—(ரூபாய் இரு நூற்று அறுபத்தி ஒன்று மட்டும்) தனியாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஆனால் இந்த அனுமதி சென்னை மாநகரில் உருவாகும் அல்லது சென்னை மாநகருக்குள் தனியாரால் சேகரிக்கப்படும் குப்பைக்கு மட்டுமே நடைமுறையில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் வளசரவாக்கம் ஊராட்சி அமைப்பிற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அவர்கள் சேகரிக்கும் குப்பையினை அவர்களிடமிருந்து மேற்சொன்ன விகிதத்தில் களைதல் கட்டணத்தை பெற்றுக்கொண்டு குப்பையை களைய தற்காலிகமாக இரண்டு மாதங்களுக்கு அந்த ஊராட்சி சென்னை மாநகரின் அருகில் உள்ளதாலும் சென்னை மாநகரின் புறநகர் சுற்றுச்சூழல் இனம் தொடர்பானது என்பதாலும் மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அனுமதி வழங்கப்பட்டு பின்னர் மன்றத்தின் பின்னேற்பும் பெறப்பட்டது.

தற்போது மடிப்பாக்கம் ஊராட்சியும் அவர்களுடைய குப்பை கொட்டும் தளத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெறுவதால் தற்காலிகமாக சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்ட அனுமதி கேட்கிறார்கள் என்பதாலும், இந்த நகராட்சியும் சென்னை மாநகரத்தின் புறநகர் பகுதி என்பதாலும், இது சுற்றுச்சூழல் இனம் என்பதாலும், மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள களைதல் கட்டணவிகிதத்தில் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுடன் சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அவ்வூராட்சியில் உருவாகும்

குப்பையினை கொட்டுவதற்கு அனுமதி வழங்கியதற்கு நிலைகுழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 38/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

**"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.30, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>தி.க.மே.து.ந.க.எண். எ7/148/2008</u>**

**<u>ஆணையரின் 15.02.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.102/2008 பொருள் எண்:47

**<u>சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையை கொட்ட கொட்டிவாக்கம் ஊராட்சி மன்றத்திற்கு அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டுதல்</u>**

தலைவர், கொட்டிவாக்கம் ஊராட்சி மன்றம், அவர்களது 02.01.2008 நாளிட்ட கடிதத்தில், கொட்டிவாக்கம் ஊராட்சி சென்னை மாநகரை ஒட்டியுள்ள பெரிய ஊராட்சியாகும் என்றும், மக்கள் தொகை அதிகமாக உள்ள பல அடுக்குமாடி குடியிருப்புகள் கொண்ட ஊராட்சி ஆகும் என்றும், கொட்டிவாக்கம் ஊராட்சியில் ஏற்கனவே இருந்த குளம் குப்பை குட்டை பகுதிகளில் ஊராட்சியில் சேகரமாகும் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன என்றும், அந்த குளம் குப்பைகள் அரசு உத்தரவுப்படி சுத்தப்படுத்தப்பட்டு மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் எனவே, அந்த ஊராட்சியில் சேகரிக்கப்படும் குப்பையினை கொட்டுவதற்கு மாற்று இடம் இல்லாமல் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும், எனவே, சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் இடமும் கொட்டிவாக்கம் ஊராட்சியின் பக்கத்தில்தான் உள்ளது என்றும், ஆகையால் குப்பைகளை சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் இடத்தில் கொட்டுவதற்கு அனுமதி வழங்கமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே, சென்னை மாநகராட்சியில் தனியார் எவரேனும் குப்பையினை குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்ட விரும்பினால், அதற்கென களைதல் கட்டணம்(Disposal Charges) செலுத்தி சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு களைய அனுமதி வழங்கலாம் என்று மன்றத்தின் தீர்மானம் எண்.400/2003, நாள்24.07.2003 அமுலில் உள்ளது. இந்த தீர்மானத்தில் கீழ்வருமாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(1) தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பையினை களைய விரும்பினால், அவர்களிடமிருந்து களைதல் கட்டணம் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கவும், (2) அதற்கான களைதல் கட்டணத்தை 2003ஆம் ஆண்டிற்கு ரூ.161/—(ரூபாய் நூற்று அறுபத்து ஒன்று மட்டும்) என்றும் மற்றும் அதனில் ஒவ்வோர் ஆண்டும் 10 சதவிகிதம் அதிகரிப்பு செய்து களைதல் கட்டணத்தை நிர்ணயிக்கவும் (3) அதற்கான விதிமுறைகளை வகுக்கவும்

தற்போது 2008ம் ஆண்டிற்கு தனியார் சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை களைவதற்காக ஒரு டன்னிற்கு ரூ.261/—(ரூபாய் இரு நூற்று அறுபத்து ஒன்று மட்டும்) தனியாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

ஆனால் இந்த அனுமதி சென்னை மாநகரில் உருவாகும் அல்லது சென்னை மாநகருக்குள் தனியாரால் சேகரிக்கப்படும் குப்பைக்கு மட்டுமே நடைமுறையில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் வளசரவாக்கம் ஊராட்சி அமைப்பிற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அவர்கள் சேகரிக்கும் குப்பையினை அவர்களிடமிருந்து மேற்சொன்ன விகிதத்தில் களைதல் கட்டணத்தை பெற்றுக்கொண்டு குப்பையை களைய தற்காலிகமாக இரண்டு மாதங்களுக்கு அந்த ஊராட்சி சென்னை மாநகரின் அருகில் உள்ளதாலும் சென்னை மாநகரின் புறநகர் சுற்றுச்சூழல் இனம் தொடர்பானது என்பதாலும் மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அனுமதி வழங்கப்பட்டு பின்னர் மன்றத்தின் பின்னேற்பும் பெறப்பட்டது.

தற்போது கொட்டிவாக்கம் ஊராட்சியும் அவர்களுடைய குப்பை கொட்டும் இடம் மழைநீர் சேகரிக்கும் இடமாக மாறிவிட்டதால், சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை கொட்ட அனுமதி கேட்கிறார்கள் என்பதாலும், இந்த நகராட்சியும் சென்னை மாநகரத்தின் புறநகர் பகுதி என்பதாலும், இது சுற்றுச்சூழல் இனம் என்பதாலும், மன்றத்தின் பின்னேற்பினை

எதிர்நோக்கி அவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள களைதல் கட்டணவிகிதத்தில் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுடன் சென்னை மாநகராட்சியின் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அவ்வூராட்சியில் உருவாகும் குப்பையினை கொட்டுவதற்கு அனுமதி வழங்கியதற்கு நிலைகுழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“20.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 36/08 , நாள்: 20.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

**"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.29, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/4192/07**

**ஆணையரின் 20.02.2008 நாளிட்ட குறிப்பு**
**29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.103/2008 பொருள் எண்.48

**விழிப்பு (ம) ஊழல்தடுப்பு கண்காணிப்புத்துறை அலுவலகம் கட்டிடம் கட்ட குத்தகைக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்து**

இயக்குநர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை அவர்களின் கடிதத்தில், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம் சென்னையில் உள்ள பகுதி அலுவலகங்கள் பொதுப் பணித்துறை கட்டிடம் எண். NCB/21முதல் 28 வரை P.S. குமாரசாமி ராஜா சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28ல் இயங்கி வருகிறது என்றும், 11.07.2007 நாளிட்ட அரசுக் கடிதத்தில் அமைச்சர்களுக்கும் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் தங்கும் வசதிக்காக அரசு ஒதுக்கீடு செய்வதற்காக நான்கு அரசு மாளிகைகளை உடன் காலி செய்ய உரிய ஏற்பாடுகளை செய்திடுமாறும், மாற்று இடம் தெரிவு செய்யப்பட்ட பின் எஞ்சிய 4 கட்டிடங்களையும், பொதுப்பணித்துறையிடம் ஒப்படைத்து விடுமாறும் தெரிவித்துள்ளதாகவும், இதனால் தனியார் வாடகை கட்டிடங்களில் அலுவலகத்தினை நிறுவி அடிக்கடி இடம் மாற்றிக் கொள்வதை தவிர்ததிடும் பொருட்டு மேற்படி இயக்கக அலுவலகத்துக்கு கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னை மாவட்டம் எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், பிளாக் எண்.6, நகரபுல எண்கள் 18, 19, மற்றும் 20 சென்னை மாநகராட்சி மண்டலம்–5, வார்டு எண்.68, கஜபதி நாயுடு தெருவில் உள்ள சுமார் 4 1/4 கிரவுண்டு நிலம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானதாக காலியாக உள்ளதாக தெரிய வருகிறது. என்றும் தெரிவித்து மேற்கண்ட இடத்தில் இவ்வலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட நில ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

விழிப்பு மற்றும் ஊழல் கண்காணிப்புத்துறை கோரியுள்ள மேற்படி நிலம் சென்னை மாவட்டம், எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டம், அமிஞ்சிகரை கிராமம் பிளாக் எண்.6, நகரபுல எண்கள். 18,19,20. சம்பந்தப்பட்ட புலங்களாகும், இந்த புலங்கள் மூன்றும் தற்போது சென்னை மாநகராட்சியின் வசம் நான்கு பக்கங்களிலும் சுற்றுச் சுவர்கள் அமைக்கப்பட்டு காலியாக உள்ளது. இதன் மத்தியில் ஒரு சிறிய கூரை கொட்டகை அமைந்துள்ளது. இந்த புலங்கள் மூன்றும் அடுத்தடுத்து இணைந்து அமைந்துள்ளது. இந்த இடம் சென்னை மாநகராட்சிக்கு உரிமையான இடமாகும். இந்த இடத்தின் மொத்த விஸ்தீரணம் 4 மனை 1205 சதுர அடி ஆகும்.

மேற்கண்ட நிலங்கள் நிலப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:

| கிராமம் | புலஎண். | பழைய புலஎண். | இருப்பிடம் | வகைப்பாடு | விஸ்தீரணம் | உரிமை |
|---|---|---|---|---|---|---|
| அமைந்தகரை | 18 | 14 பாகம் | கதவு | ரயத்துவாரி | 0.05.05.0 | மதராஸ் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | எண்.29 | மா | | மாநகராட்சி கூரைவீடு |
| அமைந்தகரை | 19 | 15/பாகம் | பிளாட் சி | ரயத்துவாரி மா | 0.02.49.5 | மதராஸ் மாநகராட்சி காலிமனை |
| அமைந்தகரை | 20 | 15/பாகம் | பிளாட்–டி | ரயத்துவாரி மா | 0.02.49.05 | மதராஸ் மாநகராட்சி காலிமனை |

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அரசு மற்றும் அரசு சார்ந்த பிற துறைகளுக்கு அளிக்கவேண்டுமெனில் அந்நிலங்களுக்கு சந்தைவிலை மதிப்பின் அடிப்படையில் நிலக்கிரயம் பெற்றுக்கொண்டு வழங்கவேண்டுமென அரசாணை எண்.35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.2.1997ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/4192/07</u>**

மேலும், குத்தகைக்கு வழங்கும் நிகழ்வுகளில் சந்தைவிலை மதிப்பில் ஒரு விழுக்காடு தொகையினை (+1% தலவரி +5% தலமேல் வரி) வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு வழங்க அரசாணை(நிலை)எண்.460 வருவாய்(நிமு2) துறை நாள் 4.6.1998 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசு துறையான விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை அலுவலக கட்டிடம் கட்ட இடஒதுக்கீடு கோரியுள்ளதால், இத்துறை கோரியுள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை சந்தைவிலையின் அடிப்படையில் விற்பனை செய்திடவோ அல்லது சந்தை விலை மதிப்பில் (+1% தலவரி +5% தலமேல் வரி) தொகையினை வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு அளிக்கவோ அரசின் ஆணை கோரப்பட்டது.

இது குறித்து 6.2.2008 நாளிட்ட அரசு கடிதத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம் கட்ட தேவைப்படும் நிலத்தை அத்துறைக்கு நடைமுறையிலுள்ள விதிகளின்படி குத்தகைக்கு விட சென்னை மாநகராட்சி மன்றத்தின் இசைவினை தீர்மானம் மூலம் பெற்று அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

5வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.01, நாள் 14.02.2008ல் மேற்படி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட சந்தை விலை மதிப்பில் வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு இட ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், மண்டலம் -5, வார்டு-68 கஜபதி நாயுடு தெருவில் உள்ள 4 மனை 1205 சதுர அடி நிலத்தினை விழிப்பு (ம) ஊழல்தடுப்பு கண்காணிப்புத்துறை அலுவலகம் கட்டிடம் கட்ட தற்போதைய சந்தை விலையில் 1 % மற்றும் 1% தலவரி + 5% தலமேல்வரி மதிப்புடன் ( மொத்தம் 7% ) சேர்த்து வருட வாடகையாக நிர்ணயம் செய்து குத்தகைக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.24, நாள்: 22.2.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18.

மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3471/2007

## ஆணையரின் 4.2.2008 நாளிட்ட குறிப்பு

## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.104/2008 பொருள் எண்.49

### திறந்தவெளி நிலம் எடுத்தல்

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்த வெளி நிலங்களை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளுமாறு 19.6.07 நாளிட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கேட்டுக் கொண்டது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொண்ட 74 இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களை புலத்தணிக்கை செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து, இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்து கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதனை தொடர்ந்து மண்டல அலுவலகம்–1லிருந்து 1நிலத்துக்கும், மண்டல அலுவலகம்–4லிருந்து 3 நிலத்துக்கும், புலத்தணிக்கை அறிக்கைகள் வார்டுகுழு தீர்மானங்களுடன் கிடைக்கப்பெற்றது.

மண்டல அலுவலகம்–1இன் அறிக்கையில் 1 இடத்திலுள்ள நிலத்தினை சென்னை மாநகராட்சி எடுத்துக் கொண்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, எனினும் இதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறவேண்டும். இந்த ஒரு நிலத்தினை எடுத்துக் கொள்வதற்கு 1வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.168/2007, நாள்.19.09.2007 இல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மண்டல அலுவலகம்–4 இன் அறிக்கையில் 1 இடம் மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாகவும், 2 இடம் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய 1 நிலத்துக்கு 4வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.764 , நாள்.24.09.2007ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மண்டல அலுவலர்கள் 1, மற்றும் 4 ஆகியோர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட 2 இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களில் வரிசை எண். 2ல் கண்டுள்ள நிலத்தினை எடுத்துக்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் வரிசை எண்.1ல் கண்டுள்ள நிலத்தினை எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும் நிலைக்குழு (வமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ. | மண்டலம் | வார்டு எண். | இடம் | கிராமம் | புல எண். | பரப்பளவு | வார்டு குழு பரிந்துரை எண்.(ம) தேதி. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 57 | 351,352 &353 கொன்னூர் நெடுஞ்சாலை | அயனாவரம் | 182/2 பாகம் | 1945.77 ச.மீ. | 764/07. நாள்.24.9.07 |
| 2 | 1 | 1 | காமராஜர் சாலை | கொடுங்கையூர் | 70/71 பாகம் பிளாக் | 1206 ச.மீ. | 168/07 நாள்.19.9.07. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | எண்.31 | | |

**"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.23, நாள்: 22.2.2008–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து வரிசை எண்.2–ல் கண்டுள்ள நிலத்தினை எடுத்துக் கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், வரிசை எண்.1–ல் கண்டுள்ள நிலத்தினை எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ5/ 1904 /2007</u>**

**<u>ஆணையரின் 15.02.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண்.105/2008 பொருள் எண்.50

**<u>துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு இறுதி தெரிவுப்பட்டியல்</u>**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணிக்காக அனுமதிக்கப்பட்ட துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களை நிர்வாக நடைமுறைக்கு ஏற்றவாறு மேற்கண்ட சிறப்பு அலுவலர் தீர்மானம் / மன்றத்தீர்மானங்களின்படி மாற்றம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியினை ஆய்வு செய்ய அனுமதிக்கப்பட்ட துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் 215 ஆகும். இவர்களின் பணிகள் துப்புரவு பணியாளர்களின் வருகையினை இருவேளையும் பதிவு செய்தல், துப்புரவு பணியில் ஈடுபட செய்தல், துப்புரவு பணியில் சரிவர செயல்படுகிறார்களா என ஆய்வு செய்தல், விடுப்பு கணக்குகள் சரிபார்த்தல், பணிப்பதிவேட்டின் பதிவுகளை முறையாக செயல்படுத்துதல், மாத ஊதியம், ஊதிய உயர்வு மற்றும் பணப்பயன்களை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்றவையாகும்.

மேற்கண்ட பணிகளில் ஈடுபடும் துப்புரவு ஆய்வாளர்களுக்கான பதவி உயர்வு மற்றும் பதவி மாற்றம் செய்ய மன்றத்தீர்மான எண். 1164/97, நாள்.12.02.1997ல் கீழ்கண்ட நியமன முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

1) முதலிடமாக குறைந்தபட்ச கல்வித் தகுதியாக எஸ்.எஸ்.எல்.சி தேறிய இரண்டு ஆண்டு அனுபவம் உள்ள துப்புரவு மேஸ்திரிகளுக்கு துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு அளிக்கவும்,

2) தகுதிவாய்ந்த துப்புரவு மேஸ்திரி பதவியில் எவரும் இல்லாத நிலையில் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு இணையான ஊதிய விகிதமுள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களில் இரண்டு ஆண்டு அனுபவம் உள்ளவர்களில் விருப்பம் பெற்று நேர்முக காணல் நடத்தி துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றம் செய்யவும்,

3) இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களில் துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றத்திற்கு எவரும் விருப்பம் தெரிவிக்காத பட்சத்தில் அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோரில் எஸ்.எஸ்.எல்.சி தேறிய இரண்டு ஆண்டு அனுபவம் உள்ளவர்களின் விருப்பம் பெற்று பணி மூப்பு அடிப்படையில் 1:1 என்ற விகிதத்தில் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு கொடுக்கவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகிறது.

2005–2006ம் ஆண்டிற்கான காலிபணியிடங்களை நிரப்ப 01.07.2005 மைய நாளுக்கான 9 நபர்களுக்கு துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கி தி.க.மே.து.ந.க.எண்.அ5/1532/05, நாள்.05.04.2007 நாளிட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 215 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களில் தற்போது 98 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள், பதவி உயர்வு, வயது முதிர்வு ஓய்வு, தன்விருப்ப ஓய்வு, இறப்பு, மண்டலம்–6, 8 மற்றும் 10ன் துப்புரவு பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டதாலும் பதவியிறக்கம் மற்றும் பல காரணங்களால் காலியாக உள்ளதாலும், துப்புரவு பணியின் அவசியம் கருதி ஜூலை'1 மைய நாளை மே'1 என மாற்றி மன்றத்தீர்மானத்தின்படி தகுதியுள்ள நபர்களின் விவரங்கள் கோரி இத்துறையின் 25.05.2007 நாளிட்ட சுற்றறிக்கை அனைத்து துறை / மண்டலங்களுக்கும் அனுப்பப்பட்டதில் கீழ்காணும் நபர்களின் விருப்பத்தின் பேரில் பரிந்துரை செய்யப்பட்ட விவரங்கள் கிடைக்கப்பட்டது,

1. திரு.ஜி.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், சுகாதாரத்துறை,
2. திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், மண்டலம்–9
3. திரு.ஆர்.ஜெகன்நாதன், அலுவலக உதவியாளர், மத்திய கணக்கு குழுமம்,



மேற்கண்ட நபர்களின் பணி விவரங்கள் பரிசீலிக்கப்பட்டதில் திரு.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், சுகாதாரத்துறை என்பவர் மீது பரிசீலனைக்குரிய 5 ஆண்டுகளுக்குள் ஆறுமாத ஊதிய உயர்வினை திரண்டபயனின்றி நிறுத்திவைக்க 04.05.2004 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டிருந்ததால் 01.07.2005 மைய நாளிட்ட பட்டியலிலிருந்து தனியரின் பெயரை நீக்கப்பட்டது. அவர் மீண்டும் 2007–2008ம் ஆண்டிற்கான துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வுக்கான பட்டியலில் சேர்க்க கோரிய மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், மண்டலம்–9 மற்றும் திரு.ஜி.ஜெகன்நாதன், அலுவலக உதவியாளர், மத்திய கணக்கு குழுமம், ஆகிய இருவரும் மன்றத்தீர்மானத்தின்படி தகுதியுள்ளவர்களாகின்றனர். தற்போதுள்ள 98 காலிபணியிடங்களுக்கு 3 நபர்கள் மட்டுமே பணிமூப்புபட்டியலில் இடம் பெறும் தகுதியுள்ளவர்களாக இருப்பதால் துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப இயலாமையால் துப்புரவு பணியை ஆய்வு செய்ய போதிய துப்புரவு ஆய்வாளர் இல்லாமல் துப்புரவு பணி பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

இந்நிலையை தவிர்க்கும் பட்சத்தில் 05.04.2007 நாளிட்ட ஆணையில் பதவி உயர்வு பெற்ற 102 துப்புரவு மேஸ்திரிகளில் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான கல்வித்தகுதியுடைய 22 நபர்களுக்கு முக்கிய பணியிடங்களில் துப்புரவு ஆய்வாளர் பணிப் பொறுப்பு வழங்கப்பட்டது. மேலும் ஆணையரின் உத்தரவின்படி 58 நபர்கள் கொண்ட அடிப்படை சுகாதார பணியாளர்கள் மற்றும் பதிவுரு எழுத்தர்களின் பட்டியல் பொதுத்துறையிலிருந்து பெற்று அவர்களை மண்டலம்–6, 8 மற்றும் 10ல் தற்காலிகமாக துப்புரவு ஆய்வாளர்களின் பணிகளில் செயல்படவும், துப்புரவு பணியை ஆய்வு செய்யவும் பணிக்கப்பட்டனர்.

அதிகப்படியான துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் துப்புரவு பணியின் பாதிப்பை தவிர்க்கும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி பணியாளர்கள்

பயன் பெறும் வகையில் கீழ்கண்டவாறு பணி நியமன முறையினை மாற்றி அமைக்க கருத்து வேண்டப்படுகிறது.

<u>மன்றத்தீர்மானம் 1164/97, நாள்.12.02.1997</u>

**<u>இனம் ’அ’ல்</u>** துப்புரவு மேஸ்திரி பதவியில் எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி என்ற கல்வித்தகுதியுடன் இரண்டு ஆண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என முறைபடுத்தப்பட்டுள்ளது. அதன்படி தற்போது தகுதியுள்ள துப்புரவு மேஸ்திரிகள் எவரும் இல்லை. ஆனால் 05.04.2007 நாளிட்ட ஆணையில் பதவி உயர்வு பெற்ற 102 துப்புரவு மேஸ்திரிகளில் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான கல்வித்தகுதியுடைய 23 துப்புரவு மேஸ்திரிகள் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான கல்வித்தகுதி மற்றும் வழிமுறை பதவிவகித்தும் இரண்டு ஆண்டு அனுபவம் இல்லாமையால் பணியாளர் பொது விதி 23(ii) (c)ல் கூறியுள்ளபடி

(c) <u>Service in a higher category counting for probation</u> - A probationer in any category of a service or class of a service shall be eligible to count for probation, his service, if any, performed otherwise than in substantive capacity on regular appointment to a higher category of the same service or class of service, as the case may be.

Nothing contained in this sub-rule shall be construed as authorising the promotion of a probationer in a category to a higher category in contravention of rule 36. (186 Hand book 23(ii) (c))

23 துப்புரவு மேஸ்திரிகளில் வரிசை எண் 12ல் உள்ள திரு.பி.சீனிவாசன் என்பவர் தன் குடும்பச்சூழ்நிலை காரணமாக துப்புரவு ஆய்வாளர் பணி ஏற்க விருப்பம் இன்மை தெரிவித்துள்ளதால் அன்னாரின் பெயரை தவிர்த்து மற்ற 22 துப்புரவு மேஸ்திரிகளுக்கும் துப்புரவு ஆய்வாளர் பதவி வழங்கவும், அவர்கள் துப்புரவு மேஸ்திரி நிலையில் இரண்டு ஆண்டுகள் (Probation period) முடிந்த அடுத்த நாள் முதல் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான தகுதிகள் பெறுகிறார்கள் என்ற விதிகளின் அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர் பதவி வழங்க கருத்து வேண்டப்படுகிறது.

<u>இனம் ‘ஆ’ன்படி</u> இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களில் துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றத்திற்கு விருப்பம் கோரியதில் திரு.ஜி.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், சுகாதாரத்துறை மற்றும் திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், மண்டலம்–9 ஆகிய இருவர் மட்டுமே விருப்பம் தெரிவித்துள்ளனர். திரு.ஜி.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து ஆறுமாத ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்திவைக்க தண்டனை வழங்கப்பட்டிருந்ததால் 2005–2006ம் ஆண்டிற்கான பட்டியலில் அன்னாரின் பெயர் நீக்கப்பட்டது. இவர் மீண்டும் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளதால் 2007–2008ம் ஆண்டிற்கான பட்டியலுக்கு தகுதியுடையவராகிறார்.

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ5/ 1904 /2007</u>**

எனவே விருப்பம் தெரிவித்துள்ள இரு இளநிலை உதவியாளர்களில் திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், மண்டலம்–9ல் பணிபுரிந்தவர் துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றத்திற்கு விருப்பம் தெரிவித்த நிலையில் தற்போது வ.து.ந.க.எண்.அ1/8448/2007, நாள்: 18.09.2007 வரிதண்டலர் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார். எனவே, திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், அவர்கள் துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றத்திற்கான தகுதியை இழந்துள்ளதால் அன்னாரின் பெயரை நீக்கவும் திரு.ஜி.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், சுகாதார துறை அவர்களுக்கு துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றம் வழங்கவும், காலி பணியிடங்களுக்கு ஏற்ப பட்டியல் தயாரிக்க இயலாமையால் இனம் 'ஆ'ல் திருத்தம் செய்து துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான கல்வித்தகுதியுடன் இணையான ஊதிய விகிதம் பெறும் அனைத்து துறைகளில் பணிபுரியும் 3ம் நிலைப்பணியாளர்களின் விருப்பம் பெற்று துப்புரவு ஆய்வாளர் பதவி மாற்றம் அளிக்கவும் கருத்து வேண்டப்படுகிறது.

இனம் 'இ'ன்படி அடிப்படை சுகாதார ஆய்வாளர்களில் எவரும் இதுவரை விருப்பம் தெரிவிக்கவில்லை. விருப்பம் தெரிவித்துள்ள திரு.ஆர்.ஜெகன்நாதன், அலுவலக உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் என்பவர் மன்றத்தீர்மானத்தின்படி தகுதி பெற்றுள்ளதால் அன்னாருக்கு துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கவும் கருத்து வேண்டப்படுகிறது.

மேற்கூறிய கருத்துக்கள் ஏற்கப்படின் கீழ்காணும் இனங்களுக்கு **<u>நியமனக்குழுவின் வழியாக மன்றத்தின்</u>** ஒப்புதல் வேண்டப்படுகிறது.

(அ) மன்றத்தீர்மான இனம் 'அ'வில் குறிப்பிட்டுள்ளபடி துப்புரவு மேஸ்திரிகளில் எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்ற இரண்டு ஆண்டுகள் முழுமையாக பணிபுரிந்தவர்கள் எவரும் இல்லாமையால் 05.04.2007 நாளிட்ட ஆணையில் பதவி உயர்வு பெற்ற 102 நபர்களின் கீழ்கண்ட 23 நபர்களைத் தவிர இதர துப்புரவு மேஸ்திரிகள் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான கல்வித்தகுதி இல்லாமையால் 23 துப்புரவு மேஸ்திரிகளில் வ.எண் 12ல் உள்ள திரு.பி.சீனிவாசன் என்பவர் தன் குடும்ப சூழ்நிலை காரணமாக துப்புரவு ஆய்வாளர் பணி ஏற்க விருப்பம் இன்மை தெரிவித்துள்ளதால் அன்னாரின் பெயரை தவிர்க்கவும் மற்ற 22 நபர்கள் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான கல்வித்தகுதி மற்றும் வழிமுறை பதவி வகித்தும் இரண்டு ஆண்டு (probation period) முழுமை பெறாமையால் பணியாளர் பொதுவிதி 23(ii) (c) ன்படி

(c) Service in a higher category counting for probation - A probationer in any category of a service or class of a service shall be eligible to count for probation, his service, if any, performed otherwise than in substantive capacity on regular appointment to a higher category of the same service or class of service, as the case may be.

Nothing contained in this sub-rule shall be construed as authorising the promotion of a probationer in a category to a higher category in contravention of rule 36. (186 Hand book 23(ii) (c))

துப்புரவு ஆய்வாளர் பதவி வழங்கவும், அவர்கள் துப்புரவு மேஸ்திரி நிலையில் இரண்டு ஆண்டுகள் Probation Period முடிந்த அடுத்த நாள் முதல் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கான தகுதிகள் பெறுகிறார்கள் என்ற அடிப்படையில் கீழ்கண்ட துப்புரவு மேஸ்திரிகளுக்கு பணிமூப்பின்படி துப்புரவு ஆய்வாளர் பதவி வழங்கவும்,

**10ம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றுள்ள துப்புரவு மேஸ்திரிகள் பணிமூப்பு பட்டியல்**

| வ.எண் | துப்புரவு மேஸ்திரிகளின் பெயர் | கல்வித்தகுதி | பணிமூப்பு எண். |
|---|---|---|---|
| 1 | எம்.ஆர்.நந்தகோபால் | 10ம் வகுப்பு தேர்ச்சி | தி.க.மே.து. எண்.அ5/1542/05, நாள்: 05.04.2007 ப.மூ. எண்.27 |
| 2 | எம்.பி.கோவிந்தசாமி | 10ம் வகுப்பு தேர்ச்சி, பி.ஏ.தேர்ச்சி | " " ப.மூ. எண்.40 |
| 3 | கே.எச்.அன்சாரி | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.46 |
| 4 | ஜி.பக்தவச்சலம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.48 |
| 5 | ஓ.ரமணய்யா | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.52 |
| 6 | கே.பூங்காவனம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.54 |
| 7 | ஆர்.சீனிவாசன் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.65 |
| 8 | ஜி.பன்னீர்செல்வம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.72 |
| 9 | கே.சிங்கைய்யா | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.76 |
| 10 | எஸ்.கனேசன், | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.80 |



| | | | |
|---|---|---|---|
| 11 | எம்.எஸ்.சேட் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.84 |
| 12 | பி.சீனிவாசன் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.87 |
| 13 | இ.பி.தனசேகரன், | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.93 |
| 14 | சி.மகாலிங்கம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.106 |
| 15 | கே.இன்பசேகர் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.107 |
| 16 | ஜி.ஆனந்தா | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.120 |
| 17 | ஆர்.மோகன் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.123 |
| 18 | எம்.இ.இஸ்மாயில் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.125 |
| 19 | ஏம்.ஆறுமுகம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.127 |
| 20 | எஸ்.சையத்மசூத் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.129 |
| 21 | கே.சபாபதி | 10ம் வகுப்பு தேர்ச்சி பி.ஏ.தேர்ச்சி | " " ப.மூ. எண்.132 |
| 22 | எம்.கபாலி | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.135 |
| 23 | ஏம்.ரவிச்சந்திரன் | 10ம் வகுப்பு தேர்ச்சி | " " ப.மூ. எண்.138 |

ஆ) மன்றத்தீர்மானம் இனம் ‘ஆ’ துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ள கீழ்கண்ட இரு இளநிலை உதவியாளர்களில் திரு.ஜி.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், சுகாதார துறை என்பவர் மீது பரிசீலனைக்குரிய 5 ஆண்டுகளில் ஒழுங்குநடவடிக்கை தொடர்ந்து ஆறுமாத ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்க தண்டனை வழங்கப்பட்டுள்ளதால் 2005–2006ம் ஆண்டிற்கான பட்டியலில் அன்னாரின் பெயர் நீக்கப்பட்டது. இவர் மீண்டும் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளதால் 2007–2008ம் ஆண்டிற்கான பட்டியலில் சேர்க்கவும், திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், அவர்கள் துப்புரவு ஆய்வாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்த நிலையில் தற்போது வ.து.ந.க.எண். அ1/8448/2007, நாள்:18.09.2007 வரிதண்டலர் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளார். எனவே, திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர் (தற்போதைய வரிதண்டலர்) அவர்களின் பெயரை நீக்கவும்,

| வ.எண் | பணியாளர் பெயர்/பதவி/ பணிபுரியும் இடம் | கல்வி தகுதி | தற்போதுள்ள பதவியில் சேர்ந்த நாள் | தாய் மொழி | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.ஜி.கோவிந்தராஜலு, இளநிலை உதவியாளர், சுகாதாரத்துறை | 10ம் வகுப்பு தேர்ச்சி | 23.08.1999 | தமிழ் | தகுதியுள்ளவர் |
| 2 | திரு.சி.சங்கர், இளநிலை உதவியாளர், (வரிதண்டலர்) மண்டலம்–9 | 10ம் வகுப்பு தேர்ச்சி | 03.03.2006 | தமிழ் | தகுதியற்றவர் option to be T.C |

இ) மன்றத்தீர்மானம் இனம் 'இ'ன்படி அடிப்படை சுகாதார ஆய்வாளர்களில் எவரும் விருப்பம் தெரிவிக்கவில்லை. அலுவலக உதவியாளர்களில் முழுமையான தகுதிகள் பெற்றுள்ள திரு.ஆர்.ஜெகன்நாதன், மத்திய கணக்கு குழுமத்தில் பணிபுரிபவர் மட்டுமே விருப்பம் தெரிவித்துள்ளார். அன்னாருக்கு ஊதிய விகிதம் 3200–85–4900 மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகளுடன் துப்புரவு ஆய்வாளர் பதவி உயர்வு அளிக்கவும்,

| வ.எண் | பணியாளர் பெயர்/பதவி/ பணிபுரியும் இடம் | கல்வி தகுதி | தற்போதுள்ள பதவியில் சேர்ந்த நாள் | தாய் மொழி | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஜெகன்நாதன் அலுவலக உதவியாளர் மத்தியகணக்கு குழுமம் | 10ம் வகுப்பு தேர்ச்சி | 22.11.2000 | தமிழ் | தகுதியுள்ளவர் |

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி4/7522/2007

## ஆணையரின் 20.02.2008 நாளிட்ட குறிப்பு
## 29.02.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.106/2008 பொருள் எண்.51

**பொது பகுப்பாய்வாளர், முதுநிலை பகுப்பாய்வாளர் மற்றும் இளநிலை பகுப்பாய்வாளர் – திருத்திய ஊதிய விகிதம் – அரசாணையை சென்னை மாநகராட்சியில்அமுல்படுத்த அனுமதி**

* * * * *

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் பொது பகுப்பாய்வு கூடத்தில் பணிபுரிந்த திரு, எம் பாலகிருஷ்ணன் பொது பகுப்பாய்வாளர் மற்றும் இதர பொது பகுப்பாய்வாளர்கள் அரசு பொது சுகாதாரத்துறையில் பொது பகுப்பாய்வாளருக்கு இணையாக தங்களது ஊதியத்தினை 1.6.1988 முதல் கீழ்கண்டவாறு திருத்தம் செய்ய கோரி உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேரரணை மனு எண் 4148/1997 தாக்கல் செய்திருந்தனர்.

உயர்நீதி மன்றம் நீதிப்பேரராணை மனு எண் 4148/1997 ல் 29.6.2001 தேதியிட்ட உத்திரவில், அரசு ஒரு நபர் கமிஷன் ஏற்படுத்தி மனுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து, ஊதிய விகிதம் திருத்தம் செய்வதற்கு வழி வகைகள் இருப்பின், உயர்நீதிமன்ற உத்திரவு பெறப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் முன்னதாக தேதியிட்டு ஊதிய விகிதம் திருத்தம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தாக்கல் செய்த நீதிப்பேரரணை மனு மேல்முறையீடு எண் 1709/2001ல் உயர்நீதி மன்றம் 10.9.2001 தேதிய உத்திரவில் நீதிப்பேரரணை மனு எண் 4148/1997 ல் உயர்நீதிமன்றம் வழங்கிய உத்திரவினையை உறுதி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ எண் | பதவியின் பெயர் | சென்னை மாநகராட்சியின் தற்போதிய ஊதிய விகிதம்1.6.88 முதல் | 1.06.1988 முதல் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் | 1.1.1996 முதல் திருத்தப்பட்ட ஊதியவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது பகுப்பாய்வாளர் | ரூ 2200–4000 | ரூ 3000–4500 | ரூ 10000–15200 |
| 2 | முதுநிலை பகுப்பாய்வாளர் | ரூ 1600–2660 | ரூ 2200–4000 | ரூ 8000–13500 |
| 3 | இளநிலை பகுப்பாய்வாளர் | ரூ 1350–2200 | ரூ 1600–2660 | ரூ 5900–9900 |

எனவே, சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் பொது பகுப்பாய்வளர் பிரிவில் பணிபுரியும் அலுவலர்களின் ஊதிய விகிதத்தினை அரசாணை எம்.எஸ்.எண்.296, நிதி (ஊதியக்குழு) துறை நாள் 29.6.2007 ல் மேலே கூறியுள்ளவாறு ஊதிய விகிதத்தை திருத்தம்

செய்து, பணப்பயன்கள் அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து வழங்குவதற்கு , நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தீர்மான எண். 542 / 2007 நாள் 29.10.2007 வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை பொது பகுப்பாய்வுகூடத்தில் பணிபுரிந்த திரு.எம்.பாலகிருஷ்னன், பொது பகுப்பாய்வாளர் மற்றும் 7 இதர பகுப்பாய்வாளர்கள் நீதிமன்ற அவமதிப்பு மனு எண்.1602/2007 தாக்கல் செய்து தங்களுக்கு அரசு பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் பொது பகுப்பாய்வாளர்கள், முதுநிலைப்பகுப்பாய்வாளர்கள் மற்றும் இளநிலைப்பகுப்பாய்வாளர்களுக்கு இணையாக ஊதியத்தினை 1.06.1988 மற்றும் 1.1.1996 முதல் திருத்தம் செய்து முன்மேவு பலனுடன் (Retrospective effect) வழங்க கோரியுள்ளனர்.

இதற்கிடையில், சென்னை உயர் நீதிமன்றம் அரசு வழக்குரைஞர் தனது கருத்துரையில், நீதிபேரானை எண்.4148/1997 நாள் 29.06.2001 ல் உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி திருத்தப்பட்ட ஊதிய பணப்பயன்கள் முன் மேவு பலனுடன் (Retrospective effect) பெற மனுதாரர்கள் தகுதியுடையவர்கள் என்று கருத்து தெரிவித்துள்ளார்.



இதனை அரசு கவனமாக பரிசீலித்து, அரசு வழக்கறிஞரின் கருத்தின் மீது மறு உத்தரவு பிறப்பித்து சென்னை மாநகராட்சி பொது பகுப்பாய்வு கூடத்தில் பணிபுரியும் பொது பகுப்பாய்வாளர்கள், முதுநிலைப்பகுப்பாய்வாளர்கள் மற்றும் இளநிலைப்பகுப்பாய்வாளர்கள் ஆகியோருக்கு 1.06.1988 மற்றும் 1.01.1996 ல் முன்தேதியிட்டு ஊதிய விகிதம் திருத்தம் செய்து இதற்கான பணப்பயன்கள் முன்மேவு பலனுடன் (Retrospective effect) வழங்க அரசாணை எண்.579 நிதி (ஊதியக்குழு துறை) நாள் 10.12.2007 ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சியின் பொதுப்பகுப்பாய்வு கூடத்தில் பணிபுரியும் பொது பகுப்பாய்வாளர்கள், முதுநிலைப்பகுப்பாய்வாளர்கள் மற்றும் இளநிலைப்பகுப்பாய்வாளர்கள் ஆகியோருக்கு ஊதிய விகித்தினை மேலே குறிப்பிட்டுள்ள அரசாணையில் கூறியவாறு அரசுத்துறையில் பணிபுரியும் பொது பகுப்பாய்வாளர்கள், முதுநிலைப்பகுப்பாய்வாளர்கள் மற்றும் இளநிலைப்பகுப்பாய்வாளர்க்கு இனங்க ஊதிய விகிதம் திருத்தம் செய்து முன்மேவு பலன் (Retrospective effect) 1.06.1988 மற்றும் 01.01.1996 முதல் வழங்குவதற்கு வெளியிடப்பட்ட அரசாணை எண்.579 நிதி (ஊதியக்குழு துறை) நாள் 10.12.2007, யை சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் மற்றும் இதன்படி தனியர்களுக்கு உரிய நிலுவைத்தொகை வழங்குவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.37, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதற்கு நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்